மாலை மலர்
19ஆகஸ்ட்2023 1:48PM



புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சியில் கேப்லான் இயக்குநர் டென்சின் ஜெம்யங், இந்திய தலைமை அதிகாரி அபிஷேக் பவாதங்கர், கல்லூரி இயக்குநர் ராஜகோவிந்தன், துணை இயக்குநர் காக்னே அகாடமிக் டீன் கார்த்திகேயன் ரிசர்ச் டீன் கலைச்செல்வன் ஆகியோர் உள்ளனர்.

# மணக்குள விநாயகர் மருத்துவகல்லூரி கேப்லான் நிறுவனத்துடன் ஒப்பந்தம்

மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி யு.எஸ்.ஏ., கேப்லான் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தில் மணக்குள விநாயகர் கல்விக் குழும மேலாண் இயக்குநர் தனசேகரன், கேப்லான் இயக்குநர் டென்சின் ஜெம்யங் ஆகியோர் கையெழுத்திட்டு ஆவணங்களை பரிமாறிக்கொண்டனர்

கேப்லானின் இந்திய தலைமை அதிகாரி அபிஷேக் பவாதங்கர், மணக்குள விநாயகர் கல்விக் குழும தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் தனசேகரன், செயலாளர் டாக்டர் நாராயணசாமி கேசவன், பொருளாளர் ராஜராஜன், மருத்துவ கல்லூரி இயக்குநர் ராஜகோ விந்தன், துணை இயக்குநர் காக்னே அகாடமிக் டீன் கார்த்திகேயன,
ரிசர்ச் டீன் கலைச்செல்வன், மருத்துவ கண்காணிப்பாளர் பிரகாஷ், துணை கண் காணிப்பாளர்கள் கிரிஜா, ஜெயஸ்ரீ, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கேப்லான் கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டுள்ள உலகப் புகழ் பெற்ற நிறுவனமாகும். இந்த நிறுவனம் மணக்குள விநாயகர் மருத்துவமனை கல்லூரியில் தன்னுடைய கற்றல் செயல்பாடுகளை விரிவாக்கம் செய்து மாணவர்களுக்கு பயிற்சியை அளிக்கும்.

நெக்ஸ்ட் தேர்வு மருத்துவ மாணவர்களுக்கு தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனவே நெக்ஸ்ட் தேர்வில் மணக்குள விநாயகர் மருத்துவ மாணவர்கள் தேர்ச்சி பெற சிறந்த பயிற்சி அளிக்க உள்ளது.

இது தவிர யு.எஸ். எம்.எல்.இ., உள்ளிட்ட சர்வதேச அளவிலான தேர்வுகளுக்கு பயிற்சியை அளிக்கும். மேலும் சர்வதேச பணி வாய்ப்புகளில் தகுதி பெறுவதற்கும் திறன் பயிற்சி அளிக்க உள்ளது.

மாலை மலர்